பொதுமக்களுக்கு அதிக சுகாதாரக் கேட்டை விளைவித்து வருகிறது. இலாபகரமாக இயங்கும் தொழிற்சாலைகள் மூலமாக இதைச் செய்ய வேண்டுமென்று அரசு அனுமதித்தால் நன்றாக இருக்கும். இதைச் செய்து முடிக்க வாய்ப்புள்ள தொழிற்சாலைகள்தான் அவை. அதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 22, திரு. வீ. சந்திரன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

22—

திறந்தவெளி சிறைச்சாலை

***23953–திரு. வீ. சந்திரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை வட்டம், அரசனி–முத்துப்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே அரசு கையகப்படுத்தியுள்ள இடத்தில் திறந்தவெளி சிறைச்சாலை அமைத்திட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிவகங்கை வட்டம், அரசனி–முத்துப்பட்டி கிராமத்தில் திறந்தவெளி சிறைச்சாலை அமைப்பது தொடர்பாகக் கருத்துரு தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

திரு. வீ. சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிவகங்கை தொகுதியில் சிவகங்கையில் நீண்ட நாட்களாக வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தில் இரண்டு சிறைச்சாலைகள்தான்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

உள்ளன. அவற்றில் 20 கைதிகள்தான் தங்க வசதி உள்ளது. சிவகங்கை மாவட்டம் தலைநகராக இருப்பதாலும், மாவட்ட நீதிமன்றங்கள் இருப்பதாலும் இளையான்குடி மற்றும் மானாமதுரை ஆகிய ஊர்களில் உள்ள நீதிமன்றங்களின் விசாரணைக் கைதிகள் தங்கிட போதிய கட்டட வசதி இல்லை. எனவே, அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் எனது சிவகங்கை தொகுதியில் போதிய இடவசதி உள்ள அரசனி—முத்துப்பட்டி கிராமத்தில் திறந்தவெளி சிறைச்சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா என மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், முத்துப்பட்டி கிராமத்தில் திறந்தவெளி சிறைச்சாலை அமைக்கும் நோக்கத்திற்காக நில நிர்வாக ஆணையரால் சிவகங்கை மாவட்டத்தில் அரசனி மற்றும் கொட்டக்குடி ஆகிய கிராமங்களில் மொத்தம் உள்ள 88.79 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் சிறைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, இந்த நிலம் 14—5—1984 முதல் சிறைத் துறையின்வசம் இருந்து வருகிறது. 27—6—1997 ஆம் நாளிட்ட அரசு கடிதத்தில் இந்த நிலத்தில் தனி கிளைச் சிறைச்சாலை அமைக்க ஏற்படும் தொடர் மற்றும் தொடராச் செலவினம் கொண்ட கருத்துருவினை அனுப்புமாறு சிறைத் துறைத் தலைவரிடம் கோரப்பட்டது. மேற்படி நிலத்தில் திறந்தவெளி சிறையினை அமைக்கலாம் எனச் சிறைத் துறைத் தலைவர் கருத்துத் தெரிவித்தார். அதன்படி திறந்தவெளி சிறை அமைக்க ஆகும் செலவின் திட்ட மதிப்பீடுகளைப் பொதுப் பணித் துறையிடம் சிறைத் துறைத் தலைவர் கோரியுள்ளார். திட்ட மதிப்பீடு பெறப்பட்டதும் அரசுக்கு இதற்கான செயற்குறிப்பு அனுப்பப்படும் எனச் சிறைத் துறைத் தலைவர் தெரிவித்துள்ளார். இருப்பினும் சிவகங்கை வட்டம் முத்துப்பட்டி கிராமத்தில் திறந்தவெளி சிறைச்சாலை அமைப்பது பற்றி கொள்கை அளவில் ஏற்கப்பட்ட ஆணை எதுவும் அரசால் இதுவரை பிறப்பிக்கப்படவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 23, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.